Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

RS Polyclinic
OUR ESTEEMED DOCTORS
Dr M. Rajkumar 98410 25996
Dr K. Namitha Bhuvaneswari 9444 288784
Dr Sathish Rajkumar 9445 401793
Dr Shanthi R 9884 650945
Dr Salina R 87780 87742
Dr Praveena E 9444 700443

மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | செவ்வாய், செப்டம்பர் 22, 2026 | இதழ் 162

## அமெரிக்காவைச் சேர்ந்த ஸ்டார்பக்ஸ் நிறுவனத்துடன் தமிழ்நாடு அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம்: முதலமைச்சர் விஜய் கையெழுத்தானது!

சென்னை, 22 செப்டம்பர் 2026: அமெரிக்காவைத் தலைமையிடமாகக் கொண்ட ஸ்டார்பக்ஸ் காபி நிறுவனம், 800 தொழில்நுட்ப நிபுணர்களுக்கு உயர் ஊதிய வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் சென்னையில் உலகளாவிய திறன் மையம் (ஜிசிசி) அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் முன்னிலையில் நேற்று (21.9.2026) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்வில், 800 தொழில்நுட்ப நிபுணர்களுக்கு உயர் ஊதிய வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், அமெரிக்காவைத் தலைமையிடமாகக் கொண்ட ஸ்டார்பக்ஸ் காபி நிறுவனத்தால் சென்னையில் உலகளாவிய திறன் மையம் (ஜிசிசி) அமைப்பதற்காக தமிழ்நாடு அரசின் வழிகாட்டி நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

அமெரிக்காவைத் தலைமையிடமாகக் கொண்ட உலகின் மிகப்பெரிய காபி நிறுவனமான ஸ்டார்பக்ஸ், 800 தொழில்நுட்ப நிபுணர்களுக்கு உயர் ஊதிய வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், சென்னையில், உலகளாவிய திறன் மையத்தை (ஜிசிசி) நிறுவ முன் வந்துள்ளது. இந்நிறுவனம், இந்தியாவில் முதல்முறையாக, தமிழ்நாட்டில் தனது உலகளாவிய திறன் மையத்தை நிறுவ முன்வந்துள்ளது. இந்தியாவில் தனது சில்லறை வணிக கூட்டு நிறுவனமான டாடா கன்ஸ்யூமர் ப்ராடெக்ட் நிறுவனத்திடமிருந்து இந்நிறுவனம் தனித்து இயங்கும். இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம், ஜிசிசி துறையில் உயர் ஊதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் தமிழ்நாடு அரசின் கொள்கைக்கு மேலும் ஊக்கமளிப்பதுடன், தமிழ்நாட்டின் ஜிசிசி வளர்ச்சிப் பயணத்தில் ஸ்டார்பக்ஸ் காபி நிறுவனம் இணைவது, மாநிலம் உலகளாவிய தொழில்நுட்ப மற்றும் வணிகச் சேவை மையமாக உருவெடுத்து வருவதையும் எடுத்துக்காட்டுகிறது.

இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்போது, ஸ்டார்பக்ஸ் காபி நிறுவனத்தின் தலைமை தொழில்நுட்ப அலுவலர் ஆனந்த் வரதராஜன், இந்தியாவை



நாங்கள் மிகவும் முக்கியமான நாடாகக் கருதுவதாகவும், சென்னையில் திறமையான தொழில்நுட்ப வல்லுநர்கள் ஏராளமாக உள்ள நிலையில், இவ்வல்லுநர்கள் பணியில் சேரும் நிறுவனங்களில் நீண்டகாலம் பணியில் தொடர்வதும் (Less Attrition), தமிழ்நாட்டிலுள்ள சிறந்த உட்கட்டமைப்பும், தமிழ்நாடு அரசு வழங்கும் ஊக்கமும், புதிய தீர்வுகளைக் காணவும், வணிகத்தை வளர்க்கவும் உதவும் என்று தெரிவித்தார்.

இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட பின்னர், தமிழ்நாடு முதலமைச்சர், ஸ்டார்பக்ஸ் காபி நிறுவனம் தனது உலகளாவிய மையத்தை சென்னையில் அமைப்பது எங்களுக்குப் பெருமகிழ்ச்சி அளிக்கிறது என்றும், உலகப் புகழ்பெற்ற இத்தகைய பெரிய நிறுவனம் நமது மாநிலத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கை, நமது இளைஞர்களின் திறமைக்குக் கிடைத்த சான்றாகும் என்றும், இந்த முதலீடு, இது போன்ற உயர் நிறுவனங்கள் வருவதற்குத் தமிழ்நாடு ஒரு சிறந்த இடம் என்பதை நிரூபிக்கும் என்றும் தெரிவித்தார். மேலும், தமிழ்நாட்டிலுள்ள திறமையான இளைஞர்களுக்குப் பல புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதோடு, ஸ்டார்பக்ஸ் காபி நிறுவனத்துடனான இப்பயணம் நீண்டகாலம் வெற்றிகரமாகத் தொடர தமிழ்நாடு அரசு சார்பில் வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், தொழில் துறை அமைச்சர் எஸ். கீர்த்தனா, தலைமைச் செயலாளர் முனைவர் மு. சாய் குமார், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் ச.விஜயகுமார், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் தீபக் ஜேக்கப், ஸ்டார்பக்ஸ் காபி நிறுவனத்தின் தலைமை தொழில்நுட்ப அலுவலர் ஆனந்த் வரதராஜன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## வெள்ளிப் பதக்கம் வென்ற வீராங்கனை இளவேனில் வாலறிவனுக்கு முதல்வர் விஜய் வாழ்த்து..!!

சென்னை, 22, செப்டம்பர் 2026: ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் ஏர் ரைபிள் துப்பாக்கி சூடு போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற இளவேனில் வாலறிவனுக்கு முதல்வர் விஜய் வாழ்த்து தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்;

ஜப்பானில் நடைபெற்றுவரும் ஆசிய விளையாட்டுப் போட்டியில், 10 மீட்டர் ஏர் ரைபிள் துப்பாக்கி சுடும் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற இந்திய மகளிர் அணியில் இடம்பெற்றதோடு, தனிநபர் பிரிவிலும் வெள்ளிப் பதக்கம் வென்ற வீராங்கனை இளவேனில் வாலறிவன் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகள்!

இந்திய வீராங்கனை




களின் இச்சாதனைகள் பாராட்டுக்குரியது. இது இளம் தலைமுறையினருக்கு இலக்கை நிர்ணயித்து, விடாமுயற்சியுடன் களமிறங்கி சாதிக்க வேண்டும் என்ற நம்பிக்கையையும், ஊக்கத்தையும் அளிக்கிறது. இந்தியாவிற்குப் பெருமை சேர்த்துள்ள விளையாட்டு வீராங்கனைகளின் வெற்றிப் பயணம் மேலும் பல புதிய வரலாறுகளைப் படைக்கட்டும்! இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

## “வெற்றிப் பயணம்” திட்டத்தின் முன்னேற்பாடுகள் குறித்து முதல்வர் விஜய் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டம்

சென்னை, 22 செப்டம்பர் 2026: முதலமைச்சர் விஜய் "வெற்றிப் பயணம்" திட்டத்தை 2.10.2026 அன்று தொடங்கி வைக்கிறார். முதலமைச்சர் விஜய் தலைமையில் நேற்று (21.9.2026) தலைமைச் செயலகத்தில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

முதலமைச்சர் விஜய் 24.8.2026 அன்று சட்டமன்றப் பேரவையில் விதி எண் 110-ன் கீழ், தமிழ்நாட்டின் எந்தப் பகுதியிலும் வசிக்கும் மகளிரும் போக்குவரத்துக் கட்டணத்தால் தமது வாய்ப்புகளை இழக்கக்கூடாது என்ற சமூகநீதிச் சிந்தனையை இவ்வரசு முதன்மையாகக் கொண்டுள்ளது என்றும், இதனைக் கருத்தில் கொண்டு, மகளிர் கட்டணமில்லாப் பயணத் திட்டத்தை விரிவுபடுத்தி, பெருமளவில் பயனளித்திடும் விதமாக, 'வெற்றிப் பயணம்' என்ற பெயரில், தேசத்தந்தை மகாத்மா காந்தியடிகள் பிறந்த நாளான அக்டோபர் 2-ஆம் தேதி முதல் செயல்படுத்தப்படும் என்றும் அறிவித்தார்கள்.

தற்போது, 7 அரசு போக்குவரத்துக் கழகங்களின் நகர சாதாரணப் பேருந்துகள் மற்றும் 40 கி.மீ. வரையிலான மலைப் பகுதி சாதாரணப் பேருந்துகளில் மகளிர் கட்டணமின்றிப் பயணம் செய்து வருகின்றனர். "வெற்றிப் பயணம்" திட்டத்தின் மூலம் இச்சேவை மாநகர, நகர்ப் பகுதிகளில் இயங்கும் எக்ஸ்பிரஸ், எல்எஸ்எஸ், டீலக்ஸ் அரசுப் பேருந்துகள், புறநகர் சாதாரணப் பேருந்துகள் மற்றும் 40 கி.மீ.க்கு மேற்பட்ட மலைப் பகுதி சாதாரணப் பேருந்துகள் ஆகியவற்றிற்கும் விரிவுபடுத்தப்பட்டு, மொத்தமாக 12,692 பேருந்துகள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படவுள்ளன. இதன்மூலம், 7 அரசு போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் மொத்த 18,413 பேருந்துகளில் 12,692 பேருந்துகள் (69



விழுக்காடு), மொத்த 1,94,649 நடைகளில் 1,65,312 நடைகள் (85 விழுக்காடு) இயக்கப்படும். நாளொன்றுக்கு சுமார் 84.32 இலட்சம் மகளிர் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுவார்கள். மேலும், "வெற்றிப் பயணம்" பேருந்துகளின் மின்னணு பயணச்சீட்டு இயந்திரங்களுடனான (இடிஎம்) இணைப்புப் பணி நிறைவடைந்துள்ளது. சோதனை மற்றும் சரிபார்ப்புப் பணிகள் 25.09.2026-க்குள்ளும், சோதனை ஓட்டம் 27.09.2026 அன்றும் மேற்கொள்ளப்படும்.

"வெற்றிப் பயணம்" திட்டத்தினை முதலமைச்சர் விஜய் 2.10.2026 அன்று தொடங்கி வைக்கவுள்ளார். இத்திட்டத்தின் மூலம், மாநிலம் முழுவதும் தமிழக மகளிருக்கான எளிதில் அணுகக்கூடிய பொதுப் போக்குவரத்து வசதி பெருமளவில் கிடைக்கும். மேலும், மாணவிகள் தொலைதூரத்தில் உள்ள கல்லூரிகளுக்குச் செல்லவும், மகளிர் தங்கள் பணியிடங்களுக்குச் செல்லவும், மருத்துவம் மற்றும் அத்தியாவசியச் சேவைகளுக்கும் கட்டணமின்றி பேருந்துகளில் பயணிக்க இயலும். இக்கூட்டத்தில், போக்குவரத்துத் துறை அமைச்சர் ஆ.விஜய் தமிழன் பார்த்திபன், தலைமைச் செயலாளர் முனைவர் மு.சாய் குமார், நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மு.அ. சித்திக், போக்குவரத்துத் துறை செயலாளர் நிர்மல்ராஜ், மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் முனைவர் ஜெயசீலன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## இந்தியாவே வியக்கும் அளவுக்கு தமிழகத்தை விஜய் வழி நடத்துவார் - அமைச்சர் செங்கோட்டையன் பேட்டி

சென்னை 22, செப்டம்பர் 2026: திருப்பூர் மாவட்டம் தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தல் வருகிற 6-ந் தேதி நடைபெற உள்ளது. இதையொட்டி தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் சத்தியபாமாவை 'விசில்' சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெறச் செய்வது தொடர்பான நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் குண்டடம் பகுதியில் நடந்தது. இதற்கு அமைச்சர் செங்கோட்டையன் தலைமை தாங்கி பேசினார். தாராபுரம் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் சத்தியபாமா முன்னிலை வகித்தார்.

முன்னதாக அமைச்சர் செங்கோட்டையன் பேட்டி அளித்த போது கூறியதாவது:-

இந்த ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலைத் தொடர்ந்து அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, கட்சியில் தனக்கு மட்டுமே அதிகாரம் இருக்க வேண்டும் என்ற நோக்கில் மூத்த நிர்வாகிகள் பலரை நீக்கினார்.

முன்னாள் முதலமைச்சர்கள் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோரால் வளர்க்கப்பட்ட இரட்டை இலை சின்னத்தை பயன்படுத்தி தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர், கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலரையும் பெருந்தொகையை செலவு செய்ய வைத்து நடுத்தெருவில் விட்டுவிட்டார். தி.மு.க.வுடன் மீண்டும் கூட்டணி அமைத்து பெரிய வெற்றியைப் பெற்று ஆட்சி அமைக்கலாம் என்று அண்ணா தி.மு.க.வினர் கனவு காண்கிறார்கள். ஆனால், தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய்யின் தலைமையில்தான் மாற்றம் ஏற்படும்.

தமிழ்நாட்டில் அரசியல்வாதிகள் லஞ்சம் பெறாத நிலை உருவாக வேண்டும். தேர்தலில் அதிகப்படியான செலவு இல்லாமல் ஆட்சி நடைபெறும் சூழலை உருவாக்க வேண்டும். எதிர்காலத்தில் குடிநீர் பற்றாக்குறை இல்லாத நிலையை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஓராண்டு காலத்திற்குப்பிறகு இந்தியாவே வியக்கும் அளவுக்கு அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாட்டை வழிநடத்தும் தலைவராக விஜய் இருப்பார். அவரை வீழ்த்துவதற்கு எவரும் தமிழ் மண்ணில் பிறக்கவில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

## பல மருத்துவத் துறைகளை ஒரே தளத்தின் கீழ் கொண்டு வரும் ஹெர் பெண்கள் நலன் மற்றும் நீண்ட ஆயுள் மாநாடு!

சென்னை 22, செப்டம்பர் 2026: Be The One Longevity Centre நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் கிளினிக்கல் இயக்குநரான டாக்டர் இர்ஃபானா ஹமீத், பெண்களின் உடல் நலம் மற்றும் நீண்ட ஆயுளை மையமாகக் கொண்ட ஹெர் ரீ வுமன்ஸ் ஹெல்த் & லான்ஜெவிட்டி சம்மிட் மாநாட்டை செப்டம்பர் 19 ஆம் தேதி தேனாம்பேட்டையில் உள்ள ஹோட்டல் புல்மேனில் நடத்தினார். பெண்களின் உடல் நலம் மற்றும் நீண்ட ஆயுளுக்காக இந்தியாவில் நடைபெறும் முதல் பல்துறை மாநாடுகளில் ஒன்றான ஹெர் மாநாடு, பெண்களின் வாழ்க்கையின் பல்வேறு கட்டங்களில் ஏற்படும் உடல் நலத் தேவைகளை வெவ்வேறு மருத்துவத் துறைகளின் கோணத்தில் அலசி ஆராய்ந்தது.



ஒருநாள் நடைபெற்ற இந்த மாநாட்டில், பெண்களின் சுகாதாரம் சார்ந்த பல்வேறு அம்சங்கள் குறித்து மருத்துவ நிபுணர்கள் கலந்துரையாடினர். நோய்த் தடுப்பு, நவீன மருத்துவ அணுகுமுறைகள், நீண்ட ஆயுள் மற்றும் பெண்களின் மாறிவரும் மருத்துவத் தேவைகள் ஆகியவை முக்கியமாக விவாதிக்கப்பட்டன. டாக்டர் இர்ஃபானா மற்றும் Be The One நிறுவனத்திற்கு ஒரு முக்கியமான புதிய அத்தியாயத்தையும் இந்த மாநாடு தொடங்கி வைத்தது. Be The One Longevity – Women என்ற பிரத்யேக ஃபெம்டெக் முயற்சியும் ஹெர் மாநாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. பெண்கள் தங்களது உடல்நலன் பற்றி அதிக விழிப்புணர்வுடனும் பொறுப்புடனும் செயல்பட உதவும் வகையில் இது உருவாக்கப்பட்டது.

ஹெர் மாநாட்டின் போது இதனை டாக்டர் இர்ஃபானா அறிமுகப்படுத்தினார். மாநாட்டிற்குத் தலைமை வகித்த நேச்சுரல்ஸ் சலூன் நிறுவனத்தின் நிறுவனர் சி.கே. குமரவேல், இதனைத் தொடங்கி வைத்தார். பெண்களின் உடல்நலம் தொடர்பான தகவல்கள் மற்றும் கண்காணிப்பு வசதி களை ஒரே தளத்தில் ஒருங்கிணைக்கும் நோக்கில் இந்த தளம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் அடுத்த கட்ட வளர்ச்சியில் மாதவிடாய் சுழற்சி கண்காணிப்பு, அணியக்கூடிய தொழில்நுட்பங்கள் மற்றும் கூடுதல் உடல் நலக் கண்காணிப்பு வசதிகள் உள்ளிட்டவை இணைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பெண்கள் தங்களது உடல்நலன் குறித்த தகவல்களை தெளிவாக அறிந்துகொள்ளவும், அதன் அடிப்படையில் அதிக விழிப்புணர்வுடன் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்து, உடல்நலனை பேணிக்காக்க தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டும் என்ற டாக்டர் இர்ஃபானாவின் தொலைநோக்குப் பார்வையை இந்த முயற்சி பிரதிபலிக்கிறது.

## தென்னிந்திய உணவுத் துறையில் டிராபோலைட் விரிவாக்கம்

சென்னை 22, செப்டம்பர் 2026: டிராபோலைட் நிறுவனம், சென்னையில் உள்ள நந்தம்பாக்கம் சென்னை வர்த்தக மையத்தில் செப்டம்பர் 18 முதல் 20-ஆம் தேதி வரை நடைபெறும் இந்தியா பேக்கரி எக்ஸ்போ 2026 கண்காட்சியில் பங்கேற்கிறது. இக்கண்காட்சியில் 210 மற்றும் 213-வது அரங்குகளில் தனது பேக்கரி, சமையல், உறைந்த உணவுகள் மற்றும் விப்ட் கிரீம் பயன்பாடுகளுக்கான தயாரிப்புகளையும் தீர்வுகளையும் காட்சிப்படுத்துகிறது.

தமிழ்நாடு பேக்கர்ஸ் ஃபெடரேஷன் - இந்தியா அமைப்பால் நடத்தப்படும் இக்கண்காட்சி, தென்னிந்திய பேக்கரி துறையின் ஏழாவது பதிப்பாகும். இதில் 200-க்கும் மேற்பட்ட நிறுவனங்களும், 18,000-க்கும் அதிகமான வர்த்தகப் பார்வையாளர்களும் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. பேக்கரி தொழில் நுட்பம், உணவுப் பாதுகாப்பு குறித்த கருத்தரங்குகள், பயிலரங்குகள், நேரடி தயாரிப்பு விளக்கங்கள் மற்றும் கேக் அலங்காரப் போட்டிகளும் இடம் பெறுகின்றன.

பேக்கரி மற்றும் விப்ட் கிரீம் தயாரிப்புகளில் பாரம்பரியமாக அறியப்படும் டிராபோலைட், தற்போது சமையல், பானங்கள் மற்றும் உறைந்த இனிப்பு வகைகளுக்கான தீர்வுகளையும் வழங்கி வருகிறது. இக்கண்காட்சியில் பிரீமியம் விப்ட் டாப்பிங்ஸ், கேக் தயாரிப்புக் கலவைகள், ஃபாண்டன்ட்கள், நறுமணச் சேர்மங்கள் உள்ளிட்ட பேக்கரி தயாரிப்புகளுடன், சமையல் பயன்பாட்டிற்கான குக்கிங் பேஸ் தயாரிப்பையும் நிறுவனம் அறிமுகப்படுத்திக் காட்சிப்படுத்துகிறது.




தென்னிந்தியாவின் பேக்கரி, உணவுச் சேவை மற்றும் விருந்தோம்பல் துறைகளில் தனது சந்தை இருப்பை விரிவுபடுத்துவதுடன், உணவுத் தொழில் நிறுவனங்களின் யூவைகளுக்கு ஏற்ற தீர்வுகளை வழங்கும் கூட்டாளியாகத் தன்னை நிலைநிறுத்திக்கொள்வதும் இப்பங்கேற்பின் நோக்கமாகும்.

டிராபோலைட் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியும் நிர்வாக இயக்குநருமான புனீத் தாவர் கூறுகையில், "தென்னிந்தியாவின் பேக்கரி மற்றும் உணவுத் தொழில் நிறுவனங்களை நேரடியாகச் சந்தித்து, அவற்றின் அன்றாடத் யூவைகளைப் புரிந்துகொள்ள இக்கண்காட்சி வாய்ப்பளிக்கிறது. பல்வேறு தொழில் பிரிவுகளின் தயாரிப்பு மற்றும் உற்பத்தித் தேவைகளை அறிந்து, அவற்றுக்கு ஏற்ற எங்கள் தீர்வுகளைப் பகிர்ந்துகொள்ள இது உதவுகிறது" என்றார்.

கண்காட்சிக்கு வருகை தரும் பேக்கரி உரிமையாளர்கள், சமையல் கலைஞர்கள், உணவகங்கள் மற்றும் விடுதித் துறை சார்ந்தோர், டிராபோலைட் அரங்குகளுக்கு வருகை தந்து நிறுவனத்தின் தயாரிப்புகளைப் பார்வையிடலாம்.


## ஹவுஸ் ஆஃப் மெக்டொவல்ஸ் சோடா 'யாரி கி நயி வைப்' மூலம் நட்பின் இலக்கணத்தை மறுவரையறை செய்கிறது

புதுச்சேரி 22, செப்டம்பர் 2026: ஹவுஸ் ஆஃப் மெக்டொவல்ஸ் சோடா, தனது நீண்டகால பிராண்ட் தூதரான விஜய் தேவரகொண்டா நடித்துள்ள 'யாரி கி நயி வைப்' என்ற தங்களது சமீபத்திய பிரசாரத்தை வெளியிட்டுள்ளது. நட்புடன் இந்த பிராண்டிற்கு இருக்கும் நீண்டகால பிணைப்பைக் கட்டமைக்கும் இந்த புதிய பிரசாரம், இன்றைய புதிய தலைமுறையினர் நட்பை எவ்வாறு கொண்டாடுகிறார்கள் என்பதைப் பிரதிபலிக்கிறது. வெறுமனே நேரத்தை ஒன்றாகச் செலவிடுவதைத் தாண்டி, ஒவ்வொரு சந்திப்பையும் மறக்க முடியாததாக மாற்றும் அனுபவங்களை உருவாக்குவதை இது உணர்த்துகிறது.

ஹவுஸ் ஆஃப் மெக்டொவல்ஸ் சோடாவைப் பொறுத்தவரை, 'யாரி' (நட்பு) என்பது எப்போதுமே நண்பர்களுக்கிடையேயான இயல்பான, ஆழமான பிணைப்பைக் குறிப்பதாகும். தன்னிச்சையான தருணங்கள், பகிரப்பட்ட அனுபவங்கள் மற்றும் ஒன்றாகப் புதிதாக ஒன்றைச் செய்ய வேண்டும் என்ற நிலையான ஆசை ஆகியவற்றால் தான் இன்றைய நட்பு வடிவமைக்கப்படுகிறது என்பதை உணர்ந்து, 'யாரி கி நயி வைப்' மூலம், பிராண்ட் இந்த பழக்கமான பாதையை மேலும் ஒரு படி மேலே கொண்டு செல்கிறது. நண்பர்கள் ஒன்று சேரும்போது, ஒரு சாதாரண திட்டம் கூட நினைவில் கொள்ளத்தக்க ஒரு சிறப்பான அனுபவமாக மாறும் என்ற ஒரு எளிய கருத்தின் மூலம் இந்த பிரசாரம் அந்த உணர்வைப் படம்பிடித்துக் காட்டுகிறது.

மெக்டொவல்ஸ் சோடா சென்னைத் திறக்கும் அந்த ஒரு 'ட்விஸ்ட்', புதிய அனுபவங்களுக்கான உந்து சக்தியாக மாறும்போது, விஜய் தேவரகொண்டா மற்றும் அவரது நண்பர்களின் அன்றாடத் திட்டம் எப்படி ஒரு எதிர்பாராத திருப்பத்தை அடைகிறது என்பதை இந்த புதிய பிராண்ட் படம் உயிரோட்டமாக வெளிப்படுத்துகிறது. காலத்தால் அழியாத "ஆவோ ட்விஸ்ட் கரே" என்ற புகழ்பெற்ற பாடலின் புதிய இசை வடிவத்தின் பின்னணியில் உருவாகியுள்ள இந்த விளம்பரப் படம், நமது பழக்கமான கலாச்சாரப் பிணைப்புக்கு ஒரு நவீன வடிவத்தைக் கொடுக்கிறது.

இந்த பிரசாரம் மெக்டொவல்ஸ் சோடாவின் தோற்ற அடையாளத்தையும் புதுப்பித்துள்ளது. பிரீமியம் அழகியல் மற்றும் ஆரஞ்சு, டீல் மற்றும் வெள்ளி வண்ணங்களின் தனித்துவமான தொடுதல்களுடன் மறுவடிவமைப்பு செய்யப்பட்ட கேன் இதில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த புதுப்பிக்கப்பட்ட அடையாளமும் புதிய பிரசாரமும், பிராண்டின் நட்புறவுடனான வலுவான பிணைப்பைத் தக்கவைத்துக்கொண்டே, அதற்கு மிகவும் நவீனமானதொரு தோற்றத்தை வழங்குகிறது.




## 'ஜீரோ கா தம் - குறைபாடு இருந்தால் இலவச ரீஃபில்' மூலம் தரத்திற்கு உத்தரவாதம் அளிக்கும் பாரத்காஸ்

கோயம்புத்தூர் 22, செப்டம்பர் 2026: பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் (பிபிசிஎல்), எல்பிஜி சிலிண்டர்களின் தரம் மற்றும் வாடிக்கையாளர் பாதுகாப்பில் தனது கவனத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் 'ஜீரோ கா தம்' (இசட்கேடி) திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், 'குறைபாடு இருந்தால் இலவச ரீஃபில்' முயற்சியின் மூலம், கோயம்புத்தூர் உள்ளிட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்களில் விநியோகத்தின் போது பாரத்காஸ் சிலிண்டரில் உண்மையான குறைபாடு கண்டறியப்பட்டால், பொருந்தக்கூடிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு வாடிக்கையாளர்கள் இலவச ரீஃபில் பெற்றுக் கொள்ளலாம்.

எல்பிஜி பாட்டிலிங் ஆலை முதல் வாடிக்கையாளரின் வீட்டு வாசல் வரை ஒவ்வொரு கட்டத்திலும் கடுமையான தரப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதை இந்தத் திட்டம் உறுதி செய்கிறது. பிபிசிஎல்-ன் எல்பிஜி பாட்டிலிங் ஆலைகள், தேசிய சான்றிதழ் அமைப்புகளுக்கான அங்கீகார வாரியமான (என்ஏபிசிபி) அங்கீகாரம் பெற்ற சுயாதீன நிறுவனங்களால் கடுமையான மூன்றாம் தரப்பு சான்றிதழ் தணிக்கைகளுக்கு உட்படுத்தப்படுகின்றன. இதுவரை 55 எல்பிஜி பாட்டிலிங் ஆலைகள் 'ஜீரோ கா தம்' சான்றிதழை வெற்றிகரமாகப் பெற்றுள்ளன.




மேம்பட்ட தொழில்நுட்பம், கடுமையான பராமரிப்பு நடைமுறைகள், பாதுகாப்பு சோதனைப் புள்ளிகள் மற்றும் சுயாதீன தரச் சான்றிதழ் ஆகியவற்றை ஒருங்கிணைத்து, செயல்பாட்டு கட்டுப்பாடுகளை வலுப்படுத்துவதுடன், குறைபாடற்ற சிலிண்டர்கள் மட்டுமே வாடிக்கையாளர்களை சென்றடைவதை இந்த முயற்சி உறுதி செய்கிறது. இந்தத் திட்டம் தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், படிப்படியாக பிற பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட உள்ளது. பிபிசிஎல் நிறுவனத் தின் எல்பிஜி பிரிவு வர்த்தகத் தலைவர் திரு. டி.வி. பாண்டியன் கூறுகையில், "'ஜீரோ கா தம்' திட்டம் தரம், செயல்பாட்டு சிறப்பு மற்றும் வாடிக்கையாளர் பாதுகாப்பில் பிபிசிஎல் கொண்டுள்ள உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது. 'குறைபாடு இருந்தால் இலவச ரீஃபில்' என்ற உத்தரவாதம், எங்கள் சிலிண்டர்களின் தரத்தில் எங்களுக்குள்ள நம்பிக்கையை மேலும் வெளிப்படுத்துவதுடன், வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட அணுகுமுறையையும் வலுப்படுத்துகிறது" என்றார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி



## தேசிய விருது வென்ற தயாரிப்பாளர்கள் குமார் மங்கத் பதக், அபிஷேக் பதக் இருவரும் 'மார்கோ' புகழ் உன்னி முகுந்தனுடன் இணையும் பிரம்மாண்ட மலையாள திரைப்படம்!

சென்னை 22, செப்டம்பர் 2026: குமார் மங்கத் பதக் மற்றும் அபிஷேக் பதக் தலைமையிலான பனோரமா ஸ்டுடியோஸ், 'மார்கோ' படத்தின் மூலம் பிரபலமான நடிகர் உன்னி முகுந்தன் மற்றும் அவரது தயாரிப்பு நிறுவனமான உன்னி முகுந்தன் ஃபிலிம்ஸ் (யூஎம்எஃப்) உடன் இணைந்து புதிய மலையாள திரைப்படத்தை தயாரிக்கிறது. இந்தப் படத்தை உன்னி முகுந்தன் எழுதி இயக்குகிறார். தேசிய விருது பெற்ற இரண்டு தயாரிப்பு நிறுவனங்களான பனோரமா ஸ்டுடியோஸ் மற்றும் உன்னி முகுந்தன் ஃபிலிம்ஸ் முதன்முறையாக ஒரு திரைப்படத்திற்காக இணைகின்றன. பான் இந்திய அளவில் ரசிகர்களை சென்றடையும் நல்ல திரைப்படங்களை உருவாக்க வேண்டும் என்பதே இந்த நிறுவனங்களின் நோக்கம்.

விமர்சன ரீதியாகவும் வர்த்தக ரீதியாகவும் புகழ்பெற்ற பல திரைப் படங்களை தயாரித்த முன்னணி தயாரிப்பு நிறுவனமாக பனோரமா ஸ்டுடியோஸ் திகழ்கிறது. 'ஓம்காரா', 'ஸ்பெஷல் 26', 'பியார் கா பஞ்ச்நாமா', 'ரெய்டு', 'ஷைத்தான்' மற்றும் பிளாக்பஸ்டர் 'த்ரிஷ்யம்' திரைப்படத் தொடர் உள்ளிட்ட பல வெற்றி படங்களை பனோரமா ஸ்டுடியோஸ் தயாரித்துள்ளது. இதுவரை ஐம்பதிற்கும் மேற்பட்ட முக்கிய விருதுகளையும் இந்நிறுவனம் பெற்றுள்ளது. அபிஷேக் பதக் இயக்கிய 'த்ரிஷ்யம் 2' திரைப்படம் பெரும் வரவேற்பைப் பெற்ற நிலையில், அவர் தற்போது மிகவும் எதிர்பார்க்கப்படும் 'த்ரிஷ்யம்: தி கன்க்ளூஷன்' திரைப்படத்தை இயக்கி, தயாரித்தும் வருகிறார். இப்படம் அக்டோபர் 2ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகிறது.



பான் இந்திய அளவில் மிகப்பெரிய வெற்றியைப் பெற்ற 'மார்கோ' திரைப்படத்திற்குப் பிறகு, உன்னி முகுந்தன் மலையாள சினிமாவின் முக்கியமான பான் இந்திய நட்சத்திரங்களில் ஒருவராக தன்னை நிலைநிறுத்தியுள்ளார். இதற்கிடையே, அவரது தயாரிப்பு நிறுவனமான உன்னி முகுந்தன் ஃபிலிம்ஸ், கதைக்கு முக்கியத்துவம் அளிக்கும் திரைப்படங்களை தயாரித்து தனக்கென ஒரு தனி அடையாளத்தை உருவாக்கியுள்ளது. அந்தப் பயணத்தின் தொடக்கமாக அமைந்த 'மேப்படியான்' திரைப்படம் தேசிய விருது பெற்றது. இந்த பயணம் நடிகர், தயாரிப்பாளர் உன்னி முகுந்தன் திரைப் பயணத்தில் முக்கியமானது.

இதனையடுத்து, இந்தியாவின் முன்னணி தயாரிப்பு நிறுவனங்களில் ஒன்றான பனோரமா ஸ்டுடியோஸுடன் உன்னி முகுந்தன் ஃபிலிம்ஸ் இணைந்துள்ளது. மேலும், உன்னி முகுந்தனின் 50வது திரைப்படம் என்ற வகையிலும் இப்படம் முக்கியத்துவம் பெறுகிறது. இந்தப் படத்தின் மூலம் அவர் முதன்முறையாக இயக்குநர் பொறுப்பையும் ஏற்கிறார். அதிரடியும் விறுவிறுப்பும் நிறைந்த கதைக்களத்துடன், பான் இந்திய அளவில் ரசிகர்களை சென்றடையும் நோக்கத்துடன் இந்தப் படம் உருவாகிறது.

இப்படத்தின் தலைப்பு, நடிகர்கள் மற்றும் படப்பிடிப்பு குறித்த விவரங்கள் விரைவில் படக்குழுவினரால் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும்.

## கரியாம்பட்டி ஊராட்சியில் தவெக அரசின் 100 நாள் சாதனையை முன்னிட்டு மாபெரும் கபாடி போட்டி வெற்றி பெற்றவர்களுக்கு திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் எஸ் கார்த்திக் ராஜன் பரிசுகள் வழங்கி கௌரவித்தார்

சென்னை 22, செப்டம்பர் 2026: திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் தொகுதி தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியற்குட்பட்ட காரியம்பட்டியில் தமிழக வெற்றிக் கழக அரசின் 100 நாள் சாதனையை முன்னிட்டு இளைஞர்களிடையே விளையாட்டுத்துறையை ஊக்கப்படுத்தும் விதமாக கார்மேகம் கபாடி குழு, மற்றும் தவெக நிர்வாகி த. இரத்தினசாமி ஆகியோர் இணைந்து வழங்கும் 58-கிலோ எடை அளவிலான இளைஞர்களுக்கான முதலாம் ஆண்டு மாபெரும் கபாடி போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் 25-க்கும் மேற்பட்ட அணிகள் கலந்து கொண்டது. இதில் முதலிடம் பெற்ற அணிக்கு 10 ஆயிரம் ரூபாய் ரொக்கத் தொகையுடன், கோப்பை மற்றும் பதக்கம் வழங்கப்பட்டது. மேலும் இரண்டாம் இடம் வெற்றி பெற்ற அணிகளுக்கு ஊக்கத்தொகையாக ரூபாய் 8001, மூன்றாவது இடம் வெற்றி பெற்ற அணிகளுக்கு ஊக்கத்தொகையாக ரூபாய் 6001, நான்காம் இடம் வெற்றி பெற்ற அணிகளுக்கு ஊக்கத்தொகையாக ரூபாய் 5001, மற்றும் வெற்றிக்கோப்பை உட்பட பதக்கங்கள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் வெற்றி பெற்ற அணிகளுக்கு திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் கார்த்திக் ராஜன் பரிசுகளை வழங்கினார்.



மேலும் நிகழ்ச்சியில் ஒட்டன்சத்திரம் தவெக நிர்வாகி ஜெ.கண்ணாயிரம், தொப்பம்பட்டி கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் க. சின்ராஜ், தொப்பம்பட்டி மத்திய ஒன்றிய கழகச் செயலாளர் முகமது அலி ஜின்னா, ஒட்டன்சத்திரம் நகரக் கழகச் செயலாளர் குரு அருண் (எ) அருண் பாண்டியன், ஒட்டன்சத்திரம் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் சுறா சுரேஷ், ஒட்டன்சத்திரம் மத்திய ஒன்றிய கழக செயலாளர் தினேஷ், ஜேபிஎஸ். சக்தீஸ் குமார், பிரேம் குமார், கள்ளிமந்தயம் கிளைக் கழகச் செயலாளர் ராஜகுமார், மற்றும் தவெக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## பிக்பாஸ் ராஜு ஜெயமோகனின் இயக்கி, நடிக்கும் டார்க் ஹியூமர் கதையான 'ஆல்மோஸ்ட் நல்லவன்' திரைப்படத்தின் இரண்டாம் கட்டப் படப்பிடிப்பு தென்காசியில் தொடங்கியது!

சென்னை 22, செப்டம்பர் 2026: பேஷன் ஸ்டுடியோஸ் மற்றும் ஆஸ்பயர் உபுண்டு பிலிம்ஸ் இணைந்து தயாரிக்கும் 'ஆல்மோஸ்ட் நல்லவன்' திரைப்படத்தின் இரண்டாம் கட்ட படப்பிடிப்பு தென்காசியில் தொடங்கியது. பிக்பாஸ் தமிழ் சீசன் 5 வெற்றியாளரும் நடிகருமான ராஜு ஜெயமோகன் இப்படத்தை இயக்கி, கதாநாயகனாகவும் நடிக்கிறார். சென்னையில் முதற் கட்டப் படப்பிடிப்பு முழுமையாக நிறைவடைந்த நிலையில், தற்போது படக்குழு தென்காசியின் அழகிய இயற்கைச் சூழலில் இரண்டாம் கட்டப் படப்பிடிப்பு தொடங்கியுள்ளது. மொட்டை மற்றும் இடிந்த கரை உள்ளிட்ட பகுதிகளில் படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது. இப்படத்தில் ராஜு ஜெயமோகன் கதாநாயகனாக நடிக்க, துஷாரா விஜயன் மற்றும் சத்யராஜ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர்.

'ஆல்மோஸ்ட் நல்லவன்' திரைப்படம் டார்க் ஹியூமர் ஜானரை சேர்ந்தது. இப்படத்தின் படப்பிடிப்பு பிரம்மாண்டமான அரங்குகள் மற்றும் செயற்கையாக உருவாக்கப்பட்ட செட்டில் நடைபெறாமல் கதையின் உண்மைத்தன்மையை வலுப்படுத்தும் வகையில் மலை, காடுகள் என இயற்கைச் சூழலில் படப்பிடிப்பு நடத்தப்படுகிறது. மேலும், படப்பிடிப்பு நடைபெறும் ஒவ்வொரு பகுதியிலும் அந்தந்த உள்ளூர் மக்களையும் படத்தில் நடிக்க வைத்து, கதைக்கு கூடுதல் இயல்புத் தன்மையைச் சேர்த்து வருகிறது படக்குழு.

இது குறித்து இயக்குநரும் நடிகருமான ராஜு ஜெயமோகன் பகிர்ந்து கொண்டதாவது, "'ஆல்மோஸ்ட் நல்லவன்' திரைப்படத்தில் இயற்கையை முக்கியமான ஒரு பகுதியாகக் கொண்டுவர வேண்டும் என்று விரும்பினோம். செட்டிற்குள் படப்பிடிப்பு நடத்துவதற்கு பதிலாக, ரியல் லொகேஷனில் படப்பிடிப்பு நடத்தி வருகிறோம். இதனால் மழை, காடுகள் மற்றும் சுற்றுப்புறச் சூழல் இவை அனைத்தும் கதையின் ஒரு பகுதியாக உள்ளன. நாங்கள் படப்பிடிப்பிற்காக எந்தப் பகுதிக்குச் சென்றாலும், அந்தந்த இடங்களைச் சேர்ந்த மக்களையும் படத்தில் நடிக்க வைக்கிறோம். தற்போது தென்காசியில் இரண்டாம் கட்டப் படப்பிடிப்பு



நடைபெற்று வருகிறது. இது அனைத்து வயதினரையும் கவரும் டார்க் ஹியூமர் திரைப்படம். எங்கள் தயாரிப்பாளர்களான சுதன் சுந்தரம் சார் மற்றும் ஹெச். வினோத் சார் இருவரின் ஆதரவால் திட்டமிட்டபடி படப்பிடிப்பு நடந்து வருவது மகிழ்ச்சி" என்றார்.

'ஆல்மோஸ்ட் நல்லவன்' திரைப்படத்தில் திறமையான நடிகர்கள் வித்தியாசமான கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். துஷாரா விஜயன், தனது நடிப்புத் திறமையை வெளிப்படுத்தும் வகையில் சவாலான கதாபாத்திரத்தில் நடிக்கிறார். அதேபோல், சத்யராஜ் இப்படத்தில் முக்கியத்துவம் வாய்ந்த கதாபாத்திரத்தில் நடிக்கிறார். சத்யராஜ் இதுவரை நடித்துள்ள 250-க்கும் மேற்பட்ட வித்தியாசமான தோற்றங்களுக்குப் பிறகும், இப்படத்திற்காக இதுவரை பார்த்திராத புதிய, சவாலான தோற்றத்தை ஏற்று நடித்துள்ளார்.

இயக்குநர்கள் பாக்யராஜ் மற்றும் நெல்சன் திலீப்குமார் ஆகியோரிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றிய ராஜு ஜெயமோகன், 'ஆல்மோஸ்ட் நல்லவன்' திரைப்படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமாகிறார். அதேசமயம், இப்படத்தில் கதாநாயகனாகவும் நடிக்கிறார். பேஷன் ஸ்டுடியோஸ் சார்பில் சுதன் சுந்தரம் மற்றும் ஆஸ்பயர் உபுண்டு பிலிம்ஸ் சார்பில் ஹெச். வினோத் ஆகியோர் இப்படத்தைத் தயாரிக்கின்றனர். இப்படம் குறித்த அடுத்தடுத்த தகவல்கள் உரிய நேரத்தில் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும்.

தொழில்நுட்பக்குழு விவரம்:

ஒளிப்பதிவு: டி.எஸ். பிரசன்னா, படத்தொகுப்பு: கோவிந்த், கலை இயக்கம்: பாலா ஜெயப்ரதா, இசை: ஃபாக்ஸ்ன், சண்டைக் காட்சிகள்: விக்கி, ஆடை வடிவமைப்பு: ரம்யா சேகர், விஎஃப்எக்ஸ்: நாக் ஸ்டூடியோஸ்.

## தமிழ் திரையுலகில் வளர்ச்சி பாதையில் டிரிபிள் எம் புரொடக்ஷன்

சென்னை 22, செப்டம்பர் 2026: யூஏஇ-யை மையமாகக் கொண்டு செயல்படும் இந்த நிறுவனத்தை அதன் எக்ஸிக்யூட்டிவ் டைரக்டர் ஜி. பாபு ராமகிருஷ்ணன் வழி நடத்தி வருகிறார். யூஏஇ, கத்தார், இந்தியா மற்றும் சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளில் எஃப்எம்சிஜி வர்த்தகம் மற்றும் முதலீட்டு துறையில் அனுபவம் பெற்ற அவர், ட்ரிபிள் எம் புரொடக்ஷன் மூலம் சினிமா மற்றும் பொழுதுபோக்குத் துறையிலும் தனது செயல்பாடுகளை விரிவுபடுத்தியுள்ளார்.

Irani, Niram Marum Ulagil, Ace, Akkenam, Bun Butter Jam உள்ளிட்ட பல தமிழ் திரைப்படங்களுடன் ட்ரிபிள் எம் புரொடக்ஷன் இணைந்து பணியாற்றியுள்ளது. யூஏஇ, சவுதி அரேபியா, கத்தார், குவைத், பஹ்ரைன் மற்றும் ஓமன் உள்ளிட்ட ஜிசிசி நாடுகளிலும் திரைப்பட வெளியீடு மற்றும் விநியோக பணிகளை நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில், இயக்குநர் ராம் இயக்கியுள்ள Yezhu Kadal Yezhu Malai திரைப்படத்தின் வெளிநாட்டு விநியோகத்திலும் ட்ரிபிள் எம் புரொடக்ஷன் எல்எல்சி, துபாய் இணைந்துள்ளது.




நிவின் பாலி, அஞ்சலி மற்றும் சூரி முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ள இப்படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசையமைத்துள்ளார். விஹவுஸ் புரொடக்ஷன் சார்பில் சுரேஷ் காமாட்சி தயாரித்துள்ள இந்த திரைப்படம் 2026 அக்டோபர் 1-ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

தமிழ் திரைப்படங்களை ஜிசிசி மற்றும் சர்வதேச ரசிகர்களிடம் கொண்டு சேர்ப்பதுடன், இந்திய திரையுலகுக்கும் வெளிநாட்டு சந்தைகளுக்கும் இடையிலான தொடர்பை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் ட்ரிபிள் எம் புரொடக்ஷன் எல்எல்சி செயல்பட்டு வருகிறது.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
செவ்வாய்,
செப்டம்பர் 22, 2026

## 'டோரதி' திரைப்படம் செப்டம்பர் 25 அன்று உலகளவில் திரையரங்குகளில் வெளியாவதை முன்னிட்டு, இளையராஜாவின் இசையுடன் தமிழ்நாடு முழுவதும் பயணிக்கும் 'டோரதி'யின் கேரவன்!

சென்னை 22, செப்டம்பர் 2026: கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள 'டோரதி' திரைப் படத்தின் விளம்பரப் பணிகள் தற்போது தொடங்கியுள்ளது. மதுரையில் இருந்து ஸ்பெஷலான லாரி ரோடு ட்ரிப் தொடங்கியுள்ளது. திரைப் படத்தின் உலகையும், மேஸ்ட்ரோ இளையராஜாவின் இசையையும் தமிழ்நாடு முழுவதும் ரசிகர்களிடம் நேரடியாகக் கொண்டு சேர்க்கும் வகையில் இந்தப் பயணம் தொடங்கப் பட்டுள்ளது.

கடந்த நாற்பது வருடங்களுக்கும் மேலாக, மேஸ்ட்ரோ இளையராஜாவின் இசை ஒளியின் வேகத்தைவிட வேகமாகப் பயணித்து வருகிறது. தலைமுறைகள், புவியியல் எல்லைகள், மொழிகள் என அனைத்தையும் கடந்து அனைவருடனும் கலந்துள்ள அந்த இசை, இப்போது 'டோரதி' திரைப்படத்திற்கும் சிறப்பு சேர்த்துள்ளது. இதற்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட கேரவன் தமிழ்நாடு முழுவதும் பயணிக்கிறது.

'டோரதி' திரைப் படத்தின் கதையுலகில் முக்கியமான இடம் பெறும் ஒன்றால் ஈர்க்கப்பட்டு உருவாக்கப்பட்டுள்ள இந்த கேரவன், திரைப்பட விளம்பரப் பயணத்தின் ஒரு பகுதியாக மட்டுமே இல்லாமல், மேஸ்ட்ரோ இளையராஜாவின் ஒரிஜினல் ஸ்கோர் இசையையும் தன்னுடன் எடுத்துச் செல்கிறது. நகரங்கள் மற்றும் ஊர்கள் வழியாக இந்தக் கேரவன் பயணிக்கும் போது, இளையராஜாவின் இசையும் 'டோரதி'யுடன் இணைந்து பயணிக் கிறது. இதன் மூலம் திரைப்படம் திரையரங்குகளை அடைவதற்கு முன்பே ரசிகர்களுக்கு சிறந்த சினிமா அனுபவத்தை தரும். மதுரையில் தொடங்கிய இந்த



ரோடு ட்ரிப் நிகழ்வில், திரைப்படத்தின் கதாநாயகர்களில் ஒருவரான ரிஷிகாந்த், இந்த லாரியை ஓட்டிய படி பயணத்தைத் தொடங்கி வைத்தார்.

இந்தப் படத்தில் கீர்த்தி சுரேஷ், சனாந்த் மற்றும் ரிஷிகாந்த், முத்துக்குமார் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். 'டோரதி' திரைப் படம் செப்டம்பர் 25 அன்று உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகிறது.

கார்த்திக் சுப்புராஜ் எழுதி இயக்கியுள்ள 'டோரதி' திரைப் படத்தை ஜோதி தேஷ் பாண்டே, குணீத் மோங்கா கபூர் மற்றும் அச்சின் ஜெயின் ஆகியோர் தயாரித்துள்ளனர். ஜியோ ஸ்டூடியோஸ் மற்றும் சிக்யா என்டர்டெயின்மென்ட் ஆகிய நிறுவனங்கள் இப்படத்தை வழங்குகின்றன. சிக்யா என்டர்டெயின்மென்ட் மற்றும் தம்மம் ஃபிலிம்ஸ் இணைந்து இப்படத்தைத் தயாரித்துள்ளன.

எஸ். திருநாவுக்கரசு ஒளிப்பதிவை மேற்கொண்டுள்ளார். கணேஷ் சிவா படத்தொகுப்பாளராகவும், பவன் நரேந்திரா நிர்வாக தயாரிப்பாளராகவும் பணியாற்றியுள்ளனர். கூடுதல் திரைக்கதையை சரவணன் சந்திரன் எழுதியுள்ளார். தொழில்நுட்பக் குழுவில் ஆக்ஷன் இயக்குநர் தினேஷ் சுப்பராயன், நடன இயக்குநர் ஷெரிஃப் எம்., ஆடை வடிவமைப்பாளர் பிரவீன் ராஜா, சிங்க் சவுண்ட் டிசைனர் தாமஸ் குரியன் மற்றும் தயாரிப்பு வடிவமைப்பாளர் குமார் கங்கப்பன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

## 'சிக்மா' திரைப்படத்தின் டிரெய்லர் மற்றும் இசை வெளியீட்டு விழா நிகழ்வு!

சென்னை 22, செப்டம்பர் 2026: லைகா புரொடக்ஷன்ஸ் சுபாஸ்கரன் தயாரிப்பில் உருவாகியுள்ள 'சிக்மா' திரைப்படத்தின் மூலம், ஜேசன் சஞ்சய் இயக்குநராக அறிமுகமாகிறார். சந்தீப் கிஷன், ஃபரியா அப்துல்லா உள்ளிட்ட பலர் நடித்துள்ள இந்த திரைப் படம் அக்டோபர் இரண்டாம் தேதி திரையரங்குகளில் வெளியாகிறது. இந்த திரைப்படத்தின் டிரெய்லர் மற்றும் இசை வெளியீட்டு விழா நிகழ்வு நடைபெற்றது.

தயாரிப்பாளர் தமிழ்குமரன் பேசியதாவது, "'சிக்மா' படத்தின் இயக்குநர் ஜேசன் சஞ்சய்க்கு இந்த படம் எவ்வளவு முக்கியமானதோ, அதுபோலவே லைகா நிறுவனத்திற்கும் இந்த படம் மிக முக்கியமானது. ஏனெனில், அவருடைய அப்பா இன்றைய தமிழக முதல்வர் விஜய் அவர்களின் 'கத்தி' படம் தயாரித்து தான் நாங்கள் திரைத்துறைக்கு அறிமுகமானோம். இப்பொழுது அவர் மகனை நாங்கள் அறிமுகப்படுத்துவது மகிழ்ச்சி. இயக்குநராக சஞ்சய் மீது நாங்கள் வைத்த நம்பிக்கை வீண் போகவில்லை. படத்தை சிறப்பாக செய்திருக்கிறார். திறமையாளர்களை கண்டறிந்து ஊக்குவிப்பவர் சுபாஸ்கரன் சார். ஜேசன் கடின உழைப்பாளி. நிச்சயம் இன்னும் பெரிய உயரத்திற்கு செல்வார். நடிகர்கள் சந்தீப், ஃபரியா மற்றும் தொழில்நுட்பக் குழுவினர் அனைவரும் சிறப்பாக பணிபுரிந்து இருக்கிறார்கள். அனைவருக்கும் வாழ்த்துகள்".




இயக்குநர் ஜேசன் சஞ்சய், "நம் எல்லோர் வாழ்விலும் ஒரு சிக்மா மொமண்ட் கண்டிப்பாக இருக்கும். 'சிக்மா' படத்தில் எல்லா கதாபாத்திரங்களுக்கும் ஒரு தேவை, சிக்கல் இருக்கும். அப்போது அவர்கள் எடுக்கும் ஒரு முடிவால் அவர்கள் வாழ்க்கையே மாறுவது தான் 'சிக்மா'. இது என்னுடைய முதல் படம் என்பதால் எப்போதுமே ஸ்பெஷல். இந்த படத்தின் கதையை லைகா புரொடக்ஷன்ஸ் சுபாஸ்கரன் சாரிடம் சொன்ன போது எனக்கு 22 வயது. அந்த வயதில் என்னை நம்பி வாய்ப்பு கொடுத்ததற்கு நன்றி. அடுத்ததாக, தயாரிப்பாளராக தமிழ்குமரன் சாரிடம் கதை சொன்னதும், இந்த படத்திற்கு பிள்ளையார் சுழி போட்டு ரிலீஸ் வரைக்கும் கொண்டு வந்து ஆதரவு கொடுத்ததற்கு நன்றி. சந்தீப் என்னுடைய முதல் பட ஹீரோ. திறமையானவர். இந்த படம் அவருடைய கரியரில் நிச்சயம் மறக்க முடியாத அனுபவமாக இருக்கும் என நம்புகிறேன். ஃபரியாவுக்கு தமிழில் இதுதான் முதல் படம். இந்த படத்தின் ஹுதா பாத்திரத்திற்கும் இவருடைய நிஜ கேரக்டருக்கும் நிறைய ஒற்றுமை உண்டு. அந்த அளவுக்கு நேர்மையானவர், சுதந்திரமானவர். அவருக்கு தமிழில் இந்த படம் நிச்சயம் நல்ல வரவேற்பு கொடுக்கும் என உறுதியாக நம்புகிறேன். நடிகர்கள் ராஜூ சுந்தரம் மாஸ்டர் சம்பத் மற்றும் என்னுடைய தொழில்நுட்ப குழுவினர் எடிட்டர் பிரவீன் சார், டான்ஸ் மாஸ்டர் கல்யாண் சார், அனுஷா, இசையமைப்பாளர் தமன், என்னுடைய சித்தப்பா சஞ்சீவ் சார் என சிறப்பாக பணிபுரிந்த அனைவருக்கும் நன்றி. தமன் இசையில் யுவன் சங்கர் ராஜா சார், சந்தோஷ் நாராயணன் சார், ஷான் ரோல்டன் பாடல் பாடியிருப்பது எனக்கு மகிழ்ச்சி. துல்கர் சல்மான் சார், ராஜமௌலி சார், பலருக்கும் இன்ஸ்பிரேஷன் ஆக இருக்கும் சூரி சார் எல்லோருக்கும் நன்றி. என்னுடைய அம்மா, அப்பா, தங்கை திவ்யா எல்லோருக்கும் நன்றி.

படம் அக்டோபர் 2 திரையரங்குகளில் வெளியாகிறது".

## தென்னிந்திய திரையுலகின் முன்னணி நடிகைகளில் ஒருவராகத் தனது இடத்தை நிலைநிறுத்தும் முனைப்பில் நடிகை நிதி அகர்வால்!

சென்னை 22, செப்டம்பர் 2026: நடிகை நிதி அகர்வால் தனது திரைப்பயணத்தின் முக்கியமான கட்டத்தில் நுழைந்துள்ளார். இந்தியத் திரையுலகின் முன்னணி நடிகர்களுடன் இணைந்து பல படங்கள் நடித்துள்ள அவர், திரையுலகில் தனது அடுத்தகட்ட பயணத்தைத் தொடங்க முடிவு செய்துள்ளார். அதிக படங்களில் நடிக்க வேண்டும், தொடர்ந்து வளர வேண்டும், தென்னிந்திய திரையுலகின் முன்னணி நடிகைகளில் ஒருவராகத் தனது இடத்தை நிலைநிறுத்த வேண்டும் என்பதே அவரது நோக்கம். நிதி அகர்வாலை பொறுத்தவரை, வெற்றி என்பது அவர் நடிக்கும் திரைப் படங்களின் எண்ணிக்கையை மட்டுமே சார்ந்தது அல்ல. ஒரு நடிகையாக வளர்வதற்கான பயணம், உழைப்பு மற்றும் கிடைக்கும் வாய்ப்புகளே அவருக்கு முக்கியம்.

'ஹரி ஹர வீர மல்லு' மற்றும் 'தி ராஜா சாப்' ஆகிய திரைப் படங்களின் படப்பிடிப் பின்போது, ஒரே நேரத்தில் இரண்டு படங்களின் படப்பிடிப்பு ஷெட்யூலை திறம்பட சமாளித்து நடித்து கொடுத்தார். கடினமாக உழைப்பதும் தன்னை பரபரப்பாக வைத்துக் கொள்வதும் பிடித்தமான விஷயங்கள் என்கிறார் நிதி அகர்வால். இதுபற்றி நடிகை நிதி அகர்வால் பகிர்ந்து கொண்டதாவது, "எனது இலக்குகள்தான் என்னை ஊக்கப்படுத்துகின்றன. இயல்பிலேயே நான் கடினமாக உழைப்பவள். நான் எங்கு செல்ல விரும்புகிறேனோ, அந்த இடத்தை அடைய தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும் என்பது எனக்குத் தெரியும்" என்றார்.

நிதி அகர்வாலின் அடுத்தகட்டப் பயணம் பல்வேறு மொழிகள், கதைக்களங்கள் மற்றும் கதாபாத்திரங்கள் வழியாக தனது நடிப்புப் பயணத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. முன்னணி நடிகர்களின் பிரம்மாண்டமான படங்களில் தன்னையும் முக்கியத்துவம் இல்லாத கதாபாத்திரங்களில் சுருக்கிக்கொள்ள விரும்பவில்லை என்பதை நிதி அகர்வால் தெளிவுபடுத்தியுள்ளார். திரைப் படத்தின் பிரம்மாண்டத்துடன் கதையின் உள்ளடக்கத்திற்கும் முக்கியத்துவம் அளிக்க விரும்புகிறார். ஒரு நடிகையாக தனது திறமையை வெளிப்



படுத்த நல்ல கதையம்சம் உள்ள திரைப்படங்களையும் கதாபாத்திரங்களையும் எதிர்பார்த்துள்ளார். இதற்கான களம் தமிழ் சினிமா என்பதையும் இங்கு பதிவு செய்கிறார் நிதி அகர்வால்.

நிதி அகர்வாலைப் பொறுத்தவரை, தான் காதலிக்கும் சினிமாவில் வெறுமனே திரையில் தோன்றுவது மட்டுமல்லாது, தென்னிந்திய சினிமாவின் அடையாளம் காணக்கூடிய பல்வேறு கதாபாத்திரங்களில் நடித்து, முன்னணி நடிகைகளில் ஒருவராகத் தன்னை நிலைநிறுத்த வேண்டும் என்பதுதான்.

## நடிகர்கள் அர்ஜித் சங்கர் மற்றும் க்ரித்தி ஷெட்டி நடிக்கும் 'லவ்வர் பாய்' திரைப்படத்தில் இணைந்த 'காக்க காக்க', 'நான் அவனில்லை' படங்கள் புகழ் ஜீவன்!

சென்னை 22, செப்டம்பர் 2026: 'காக்க காக்க' திரைப் படத்தில் ஸ்டைலிஷ் வில்லனாகவும், 'நான் அவனில்லை' திரைப் படத்தில் கிரே ஷேட் கதாபாத்திரத்திலும் நடித்து ரசிகர்களை கவர்ந்த நடிகர் ஜீவன் தற்போது பேஷன் ஸ்டுடியோஸ் மற்றும் கேவிஎன் புரொடக்ஷன்ஸ் தயாரிப்பில், அசோக் குமார் இயக்கும் 'லவ்வர் பாய்' படத்தில் இணைந்துள்ளார்.

'காக்க காக்க' திரைப்படத்தின் மூலம் வில்லன் கதாபாத்திரத்தில் அறிமுகமாகி, மிகப் பெரிய வெற்றியைப் பெற்றதுடன், வழக்கமான கதைக்களங்களைத் தாண்டி வித்தியாசமான கமர்ஷியல் படங்களைத் தேர்ந்தெடுத்து ஹீரோவாகவும் ரசிகர்களின் மனதில் தனி இடம் பிடித்தவர் நடிகர் ஜீவன். நீண்ட இடைவெளிக்குப் பிறகு தற்போது மீண்டும் திரைத்துறைக்கு திரும்புகிறார். அசோக் குமார் இயக்கத்தில், அர்ஜித் சங்கர் மற்றும் க்ரித்தி ஷெட்டி நடிப்பில் உருவாகி வரும் 'லவ்வர் பாய்' திரைப்படத்தில் ஜீவன் தற்போது இணைந்துள்ளார். இதனால் படத்தின் மீதான எதிர்பார்ப்பு மேலும் அதிகரித்துள்ளது.

'லவ்வர் பாய்' படப்பிடிப்பில் ஜீவன் இணைந்துள்ளதை அறிமுகப்படுத்தும் வகையில், ஸ்டைலிஷான காட்சிகளுடன் கூடிய ஒரு சிறப்பு புரோமோ வீடியோவை



படக்குழு வெளியிட்டு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. ஜீவனின் வசீகரிக்கும் திரையிருப்பு மற்றும் நடிப்பை ரசித்து பார்த்த ரசிகர்களுக்கு அவர் மீண்டும் திரைப்படங்களில் நடிக்க ஆரம்பித்திருப்பது உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

வளர்ந்து வரும் புதிய தலைமுறை திறமையாளர்களுடன் ஜீவன் 'லவ்வர் பாய்' படத்தில் இணைந்திருப்பது படத்தின் மீதான எதிர்பார்ப்பை அதிகரித்துள்ளது. மேலும், அவரது கதாபாத்திரம் குறித்தும் படக்குழு ரகசியமாக வைத்துள்ளது.

அறிமுக நடிகர் அர்ஜித் சங்கர் மற்றும் க்ரித்தி ஷெட்டி முன்னணி கதாபாத்திரங்களில் நடிக்கும் 'லவ்வர் பாய்' திரைப் படத்தை அறிமுக இயக்குநர் அசோக் இயக்குகிறார். கேவிஎன் புரொடக்ஷன்ஸ் நிறுவனத்துடன் இணைந்து பேஷன் ஸ்டுடியோ சார்பில் சுதன் சுந்தரம் இப்படத்தை தயாரிக்கிறார். படம் குறித்த மேலதிக விவரங்களை வரும் நாட்களில் படக்குழு அதிகாரப் பூர்வமாக வெளியிடும்.